[1967 ஜூலை 6

### நகர மன்றங்களில் தமிழில் நிர்வாகம்

*180 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகராட்சி மன்றங்களில் தமிழில் நிர்வாகம் நடத்துவ தற்கான புதிய உத்திரவு ஏதேனும் பிறப்பிக்கப்பட்டு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) நகராட்சி மன்றங்கள் தமிழைத் தங்களது ஆட்சி மொழியாக மேற்கொள்வதற்குத் தாமே பொருத்தமான துணை விதிகளைத் தயாரித்துக் கொள்ளலாம் என்று அவைகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி மன்றங்கள் தமிழை ஆட்சி மொழியாக்குவதற்காக மாதிரித் துணை விதிகளும் அவைகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. மேற்படி மாதிரித் துணை விதிகளின் நகல் [a] ஒன்று சபை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. விநயகம் :** நகராட்சிகளில் எல்லாம் தமிழில் நடத்த வேண்டுமென்ற உத்தரவு இருந்தபோதிலும் இப்போதும் அங்கிருந்து வருகிற நோட்டீஸ்கள், டிமாண்ட் நோட்டீஸ் போன்றவை ஆங்கிலத்திலேதான் வருகின்றன என்பது அமைச்சருக்குத் தெரியுமா? இதைத் திருத்தியமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** சில குறிப்பிட்ட காரியங்களுக்கு மட்டும் ஆங்கிலத்தில் எழுதலாம் என்றும் மற்றவற்றுக்குத் தமிழைப் பயன்படுத்த வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் சிலருக்கு ஆங்கில மோகம் இருப்பதால்தான் அப்படிப் பட்ட காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது படிப்படியாக நீக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. நா. காசிராமன் :** நகராட்சிகள் தங்களது நிர்வாகத்தில் தமிழை உபயோகப்படுத்த வேண்டுமென்று எப்போது உத்தரவிடப் பட்டது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 1958-லேயே இதுபற்றிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. படிப்படியாக சிலபல மாறுதல்களுக்கு ஏற்ப அவ்வப்போது உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டிருக்கின்றன.

**திரு. முனு ஆதி :** தலைவர் அவர்களே. இந்தச் சபையில் வைக்கப் பட்டிருக்கும் அறிக்கையில் சம்பளப் பட்டியல், பயணப் பட்டியல் ஆகியவற்றுக்கு ஆங்கிலத்தையே பயன்படுத்தலாம் என்று

---

[a] 217-ம் பக்கத்தில் I இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

*1967 ஜூலை 6]*

சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் மாநில சர்க்காரைச் சேர்ந்த காரணத்தால் தமிழைப் பயன்படுத்த வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதுபற்றியும் விரைவாகப் பரிசீலித்து உத்தரவிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படும்.

**திரு. க. ர. நல்லசிவன் :** அமைச்சர் அவர்கள் 1958-ம் ஆண்டிலேயே இந்தத் திட்டம் அமலுக்கு வந்தது என்று சொன்னார்கள். பத்தாண்டுகளாக ராஜ்ய அரசாங்கக் கடிதப் போக்குவரத்துக்கு இந்த இலாக்காக்களுக்கு மாத்திரம் ஆங்கிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழிலே அக்கறையுள்ள அரசாங்கம் வந்திருக்கிற காரணத்தால் எல்லாக் கட்டத்திலும் தமிழைப் பயன் படுத்த வேண்டுமென்ற முயற்சியை விரைவுபடுத்துவார்களா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஏற்கனவே 73 இடங்களில் இந்தத் திட்டம் அமலாக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 15 இடங் களில்தான் அதுபற்றிய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கான முயற்சிகளும் விரைவாக மேற்கொள்ளப்படும்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** நகர மன்றங்கள் ஆங்கிலத்திற்குப் பதிலாக 'தமிழில் நடத்த வேண்டும்' என்று உத்தரவிடப் பட்டிருக்கிறதா, அல்லது 'தமிழிலும் நடத்தலாம்' என்று உத்தரவு அனுப்பப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இதுபற்றி உள்ளாட்சி மன்றங்கள் துணைவிதிகளைத் தயாரித்துக் கொள்வது உள்ளாட்சி மன்றங்களின் அடிப்படை உரிமைகள் என்ற முறையில் கட்டாயமாக உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. வேண்டுகோள் முறையில் தமிழை அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது. 'தமிழில் நடத்தவேண்டும்" என்றுதான் அனுப்பப்பட்டுள்ளது; 'தமிழிலும் நடத்தலாம்' என்று அனுப்பப் படவில்லை.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, may I request the Hon. Minister to state whether any municipality expressed any difficulty regarding this change-over from English to Tamil?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அது பற்றித் தகவல் இல்லை.

**திரு. ம. பொ. சிவஞானம் :** புதிதாக வந்திருக்கிற இந்த அரசாங்கத்தால் 'ஆங்கிலத்திற்குப் பதிலாக தமிழிலேதான் நடத்த வேண்டும்' என்று உத்தரவு அனுப்பப்படுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நிச்சயமாக அதுபற்றிய உத்தரவு அனுப்பப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. கே. விநாயகம்:** தமிழ் நம்முடைய தாய்மொழியாக இருப்பதால் தமிழிலே நம்முடைய நகராட்சி அலுவல்களை நடத்த வேண்டுமென்ற நிலைகள் இருந்தபோதிலும் அந்த நகராட்சிகளில் தமிழ் தெரியாதவர்கள், தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத அங்கத்தினர்கள் இருக்கக்கூடுமாதலால் அவர்களுக்காகவாவது ஆங்கிலத்தில் தொடர்ந்து நடத்த அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அப்படிப்பட்ட அதிகாரிகள் இருப்பதாகத் தகவல் இல்லை. அப்படியிருக்குமானால் அவர்களுக்குத் தக்க பயிற்சி அளித்து தமிழை மேற்கொள்ளுமாறு கூறப்படும்.

### பதநீர் இறக்குவோர்

*181 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: } திரு. எம். வில்லியம் : } மதிப்பிற்குரிய நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பதநீர் இறக்குகின்ற தொழிலாளிகளுக்கு விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டாலோ அல்லது கை, கால்கள் இழந்து விட்டாலோ அவர்களின் குடும்பத்தாருக்கு வாழ்க்கைப் பணம் கொடுக்கப்பட்டு வந்த திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும் என்று சென்னை மாநில பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனமும், ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவு சங்கங்களும் அரசாங்கத்தைக் கோரியுள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) ஆம்.

(இ) தமிழக பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்திடமிருந்து வந்த திட்டத்தை கதர் கிராம கைத்தொழில் போர்டாரால் பரிசீலனை செய்யப்பட்டு, பம்பாய் கதர் கைத்தொழில் ஆணைக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது விஷயம் தற்போது இந்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மத்திய அரசு இதை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் மாநில அளவில் தொழிலாளர்களுக்கு நன்கு பயன்படக்கூடிய திட்டங்கள் நிறைவேற்றப்படுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இது அரசைப் பொருத்த ஒன்றல்ல. இது கதர் கிராம கைத்தொழில் திட்டமாகும். இந்திய அரசாங்கத்தின் முடிவு தெரிந்த பிறகு பரிசீலிக்கப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஒரு ஆண்டில் நமது மாநிலத்தில் இந்த விபத்துக்குள்ளாகிறவர்கள் எவ்வளவு பேர்?